# இந்துக்களின் வாழ்வியலில் பறை

(மட்டக்களப்பு மாவட்டத்தினை மையமாகக்கொண்ட ஆய்வு)

Mr K. Atputhan, *Research scholar, Batticaloa, Srilanka.*

**ஆய்வுச் சுருக்கம்**

பன்னெடுங்கால வரலாற்றினையும் பண்பாட்டுப் பாரம்பரியத்தினையும் தன்னகத்தே கொண்டு இந்துக்களது வாழ்வியலோடு பின்னிப்பிணைந்து வளர்ச்சி பெற்ற பல்வேறு கலைகளில் பறையிசையும் குறிப்பிடத்தக்கது. பறையானது இசைக்கருவியாக மட்டுமன்றி கற்கால மக்களின் தொலைத்தொடர்பு சாதனமாகவும் திகழ்ந்தது. இக்கலை வடிவமானது தற்காலத்தில் பல சவால்களுக்கு முகம் கொடுக்கின்றமையை காணமுடிகின்றது. இப்பாரம்பரிய கலைவடிவத்தினை வளர்த்துச் சென்ற இடங்களில் ஆலயங்களும் பெரும் பங்கு வகிக்கின்றது. அந்தவகையில் பறைக்கலைவடிவத்தினை இன்றைய நிலையில் வளர்த்துச் செல்வதற்கு ஆலயங்களின் பங்களிப்பு எவ்வாறு காணப்படுகின்றது என்பது பற்றியும் இந்துக்களின் வாழ்வியலில் பறைக் கலைவடிவத்தினுடைய தாக்கம் பற்றியும் ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

இவ்வாய்வானது முதல்நிலைத் தரவு இரண்டாம் நிலைத் தரவு எனும் அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. முதல்நிலைத் தரவாக பங்குபற்றல், அவதானம், நேரடிப்பார்வை, நேர்காணல் என்பனவாகவும் இரண்டாம் நிலைத் தரவாக புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையதளங்கள் அமைகின்றது.

**திறவுச்சொற்கள்** : பறை, வாழ்வியல், இந்துக்கள், ஆலயங்கள், பாரம்பரியம்

## அறிமுகம்

மிகப் பெரும் பழைமையான வரலாற்றை கொண்டு விளங்கும் பெருமை தமிழுக்கும் இந்து சமயத்துக்கும் உண்டெனில் அது மிகையாகாது. அது மாத்திரமின்றி தன்னையே இயைந்து வளர்ச்சி பெற்று சூழல் மற்றும் நாகரிக மாற்றங்களினால் வழக்கொழிந்து கொண்டிருக்கும் பழம்பெரும் பண்பாட்டுக் கலை, கலாசாரக் கூறுகளை மீட்டெடுத்து அவற்றிற்கு புத்துயிர் அளிக்கும் சக்தியும் இவற்றுக்கு உண்டு. அந்தவகையில் இன்றைய காலகட்டத்தில் பல சவால்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற பாரம்பரிய கலைவடிவமான கலைக்கு புத்துயிர் அளிப்பதில் தமிழர்களதும் இந்து ஆலயங்களினதும் பங்கு மிகவும் முக்கியமானதாகும்.

இந்துக்களது உணர்வுடன் பின்னிப்பிணைந்திருந்த இக்கலைவடிவமானது அவர்களது வாழ்வியலில் முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதனை இன்றைய சமூகத்தினருக்கு ஆச்சரியமானதொன்றாகவே இருக்கின்றது. மக்கள் வாழ்வியலில் இயற்கை வழிபாட்டில் கூத்துக்களில், விழாக்களில், இறப்பில் மற்றும் இன்ன பல அம்சங்களில் பறைக் கலைவடிவம்

முக்கியம் பெற்றிருக்கின்றது. இத்தகைய பெருமை மிக்க பறைக் கலை வடிவமானது தற்காலத்தில் இந்து ஆலயங்கள் வாயிலாக எவ்வாறு இன்று வரை உயிர்ப்புடன் திகழ்கின்றது என்பது குறித்து ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

**பறை**

பழந்தமிழ் மக்கள் வேறு இன மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு முன்னமே இசையும் அதனோடு இணைந்த கூத்தும் உருவாகி வளர்ச்சியடைய தொடங்கின. இவை ஏறத்தாள மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செவ்வியல் கலைகளாக விளங்கியமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு விளங்கிய கலைவடிவங்களில் பறை முதன்மையானதாக திகழ்கின்றது.

பறையானது இசைக்கருவியாக மாத்திரமின்றி கற்கால மக்களின் தொலைத் தொடர்பு சாதனமாகவும் திகழ்கின்றது ''பறை என்ற சொல்லே இக்கருவியும் செய்தி அறிவிக்கும் முறையும்'' எனக் குறிப்பிடுகின்றது. (வளர்மதி.மு.2009 பக்1, பறை இசை ஓர் ஆய்வு)

மேலும் மேற்குறித்து நூலாசிரியர் பறை என்பதனை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றார். '' பறை என்பது ஓடும் இசையை இங்கு பெற நிறுத்தி ஓர் அளவோடும் சீரோடும், ஒத்த அழகோடு தக்க இசைக்கும் நடை, கற்பிக்கும் கருவி'' (மு.கு.நூல் - பக்3). பறை என்பது சொல்லுதல், கூறுதல் எனப்பொருள்படும். பேசுவதை இசைக்க வல்ல தாளக்கருவியான பறையானது பல்வேறு வகைகளைக் கொண்டதாக காணப்படுகின்றது. அரிப்பறை, ''அரிப்பறை மேகலையாகி யாத்ததே'' (சீவகசிந்தாமணி 2680) ஆறேறிப்பறை - இப்பறையினை வழிப்பறி மேற்கொள்வோர் பயன்படுத்தியதாக திருக்குறள் கூறுகின்றது. (குறள் 1076) நெய்தற் பறை – நெய்தல் நில மக்கள் பயன்படுத்திய பறை (1015) கூறுகின்றது. தலைப்பறை – யானை முதலியவற்றிற்கு முன்னால் கொட்டும் பறையாகவும், பன்றிப் பறை - காட்டுப் பன்றிகளை விரட்ட பயன்படுத்தப்பட்ட பறையாகவும், பூசற்றண்ணுமை - பகைவருடன் போர்புரிய வீரர்களை அழைக்கும் பறை என்றும், முரசம் வெறுப்பறை - போர்ப்பறை எனவும் முருக்கியம், வெறியாட்டுப்பறை - குறிஞ்சி நில மக்கள் வெறியாட்டுவதற்கு பயன்படுத்திய பறை எனவும் வீராசாணம் - வெற்றிப்பறை இதனை திருப்புக்களில் 264ஆம் பாடல் மூலம் அறியலாம். சாப்பறை - மரணச்சடங்கின் போது பயன்டுத்தும் பறையாகவும், வெட்டியான் பறை - மயானத்தில் அடக்கம் செய்யப்படும்போது பயன்படுத்தும் பறையாகவும், இவற்றை விடவும் உவகைப் பறை பம்பை, மீன்கோட்பறை, கல்லவடம் குரவைப் பறை, தடது, தொண்டகப்பறை, குறும்பறை, கொடுகொட்டி, கோட்பறை, தமுக்கு, நிசாளம், சூசிகம், தக்கை, தடாசி, படலை, பண்டார மேளம், பஞ்சமாசத்துவம் என பல்வேறு வகைகளில் பறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு பறைகள் பலவகை காணப்படுவதனைப் போன்று ஒவ்வொரு நிகழச்சிகளுக்கும் ஒவ்வொரு விதமான தாள அமைவுகள் கையாளப்பட்டுள்ளன. பறைமேளக் கலைஞர்கள் சப்பரத்தடி, டப்பா அடி, பாடலடி, சினிமா அடி, ஜஇன்ட் அடி, மருள் அடி, சாமிசாட்டுதல், மாறடித்தல், வாழ்ந்தடி எனப் பலவகைப்படுகின்றது. மேலும், ஆலயங்களில் ஆலயத் தாளம், அபிசேகத் தாளம். அழைப்புத் தாளம், சுற்றாளைத் தாளம், பெரியபூசைத் தாளம் என்பனவாகவும் மரணத்தின் போது ஆரம்பத் தாளம், தெரியப்படுத்தும் தாளம், எடுத்துச் செல்லும் தாளம், சந்திகூடும் தாளம் என்பனவாகவும் களியாட்டத்தின் போது வரவுத் தாளம், கோணங்கித் தாளம், இராச தாளம், பல்லாக்குத் தாளம், நாலடித் தாளம், ஆறடித் தாளம், எட்டடித் தாளம், தட்டு மாறும் தாளம் என வகைப்படுத்தப்படுகின்றது.

“பறையடிப்பு தொடர்பான மெட்டுக்கள் எழுதி வைக்கப்படவில்லை. பறைமேளக் கலைஞர்களின் கூர்ந்த கவனிப்பு, பயிற்சி, இசைமீதுள்ள ஆர்வம் காரணமாக சொற்கட்டுக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.” (நேர் காணல், பேரின்பம், பறைமேளக் கலைஞர் - களுதாவளை) அவற்றுள்

**டன்டனுக்கு, டனுக்குனக்கு**

**டன்டன்டன்டன் டனுக்கு**

**றக்கட்ட றக்கட்ட றக்கட்ட**

**றண்டக்க றண்டக்க றண்டக்க**

என்ற வயையில் பறை இசைப்பதற்கான சொற்கட்டுக்கள் அமைகின்றன. சொற்கட்டுக்கள் அடிப்படை அடிகளைத்தான் சுட்டுகின்றதே தவிர மொத்த மெட்டுக்களையும் சுட்டுவதில்லை. அதே நேரம் ஒரு அடிப்படைச் சொற்கட்டை கொண்டு இசைப்பவர் தனது கற்பனைக்கேற்ப புதிய இசைக் கோலங்களை உருவாக்க முடியும். இதுவே பறைக் கருவியின் சிறப்பம்சம் எனலாம்.

**வாழ்வியலில் பறையிசை**

ஆரம்ப கால மக்கள் தங்களது பேசுமொழியாகவும் பறையிசையினை பயன்படுத்தியுள்ளமையினை அறிய முடிகின்றது. அவர்களது இன்பங்கள், துன்பங்களை தமது குழுக்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு பறை பேருதவியாக அமைந்திருந்தது. ஏனெனில், அவர்களது உள்ளத்து உணர்வுகளுக்கு ஏற்ப பறை, இசை அமைத்துக் கொடுத்தது. அது இசையை மட்டுமன்றி அவர்களது இயக்கத்திற்கு ஏற்ப அவற்றை ஊக்குவிக்கும் வகையில் தாளத்தினை வழங்கியது.



© 2023, IRJTSR

இசை தமிழ் மக்களது உணர்ச்சிகளின் தலையாயதாக அமைந்திருந்தமையால் அவர்களது பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு நிகழ்விலும் பறை அங்கம் வகிக்கின்றது. அது மாத்திரமின்றி பறையின் ஓசையானது, தொலை தூரத்திற்கு தாக்கம் செலுத்தியமையால் அவர்களது தொலைத் தொடர்பு சாதனமாகவும் அமைந்திருந்தது. தனது குழுக்களில் இருந்து வழி தவறிச் சென்றவர்களை மீண்டும் தங்களுடன் இணைத்துக் கொள்வதற்கான வழிகாட்டியாகவும் பறை விளங்கியது. அது மாத்திரமின்றி கொடிய விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கும், பரந்துபட்ட இடங்களில் வசிப்பவர்களை ஒன்று சேர்த்து செய்திகளை அறிவிப்பதற்கும் பறை பேருதவி புரிந்தது. ஒவ்வொரு நிகழ்வுகளிற்கும் ஏற்ப ஒவ்வொரு விதமான தாள அமைப்பினை பறையிசை மூலம் அமைத்திருந்ததனாலும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் வாசிப்பதற்காக வெவ்வேறு பறைகளையும் மக்கள் பயன்படுத்தியமையினால் செய்திகளை நாவினால் உரைக்காமலே அதன் ஓசையைக் கொண்டே நிகழ்வுகளை விளங்கிக் கொண்டு அதற்கேற்ப தங்கள் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தினர். இதனூடாக நோக்குகின்றபோது பறையானது மக்களது வாழ்வியலில் எத்தகைய செல்வாக்கினை பெற்றிருந்தது என்பதனை அறிய முடிகின்றது.

போருக்கு எழுமாறு வீரர்களை அணி திரட்டவும், வெற்றி தோல்விகளை அறிவிக்கவும், மன்னரின் செய்திகளை மக்களுக்கு அறிவிப்பதற்கும், வயல்வெளிகளின்போது ஊக்கமளிக்கவும் பெருகி வரும் புனலை அடைக்கவும் பறை பயன்படுத்தப்பட்டது. இயற்கை வழிபாடு, வீட்டு விசேட விழாக்கள் ஆலய விழாக்கள் கூத்துக்கள் என்பவற்றிலும் பறை அங்கம் வகித்தது. அத்தோடு இறப்பபுக்களில் பறை முக்கியத்துவம் பெற்றிருந்தது. இறப்பிலும் ‘‘வருகையை அறிவித்தல், கிரியைகள் செய்தல், சாந்திக் கிரியை, ஊர்வலம், அடக்கம் செய்தல் என ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் தாள நடை இடம்பெறுகிறது. (நேர்காணல்)

இத்தகைய பெரும வாய்ந்த பறை இசையானது காலப்போக்கில் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்ட சாதி அமைப்பு நிலவுடமை சமூக உருவாக்கம் என்பவற்றால் பறை மேளக் கலையினை தங்கள் உயிர் நாடியாக கொண்ட மக்கள் புறந்தள்ளப்பட்டு தீண்டத் தகாதவர்களின் கலையாக மாற்றப்பட்டது வேதனைக்குரிய விடயம் பறையிசையை இசைப்பவர்கள் பறையர்கள் என வழங்கப் பெற்றனர். இவர்களை தாழ்ந்தவர்கள் என கருதினர். பறை இறப்பிலும் சடங்கிலும் கிராமியத் தெய்வ வழிபாடுகளுக்குமுரிய முக்கிய இசையாகும். இருப்பினும் இப்பறையிசையினை தங்கள் தொழிலாகவும் உயிராகவும் கருதி பலமக்கள் முன்னெடுத்தனர். இவர்களை பறையர் சமூகம் என்று ஒரு சொற்பிரயோகம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஈழத்தில் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவுனியா திருகோணமலை போன்ற பகுதிகளில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. (மட்டக்களப்பு இணையம்) ஈழத்தில் பறை இசைக்கும் பறை இசைக்கலைஞர்களுக்கும் முதன்மை வழங்குகின்ற மட்டக்களப்பில் கோளாவில், களுதாவளை,

புன்னைக் குளம், ஆரயம்பதி, கல்முனை, வெல்லாவெளி, பிலாலிவேம்பு ஆகிய பகுதிகளில் பறையிசை சிறப்பாக பேணப்பட்டுக் கொண்டிருக்கின்றமையை காணமுடிகின்றது.

**ஆலயங்களில் பறையிசை**

கலைகளுக்கெல்லாம் தாயாக விளங்கும் ஆலயங்கள் பறையிசைக்கும் உயிரளித்துக் கொண்டிருக்கின்றன. ஆலயங்களிலே தெய்வ பூசை, கோயில் வருந்தேற்றல், படையல் செய்தல், கலையாடுதல், காவடியாட்டம் என பறையிசையின் தேவைப்பாடு முதன்மை பெற்றுள்ளது. பறையிசையானது அதிகளவில் கிராமிய வழிபாடு அதாவது ஆகமம் சாரா வழிபாடுகள் இடம்பெறும் ஆலயங்களில் பயன்படுத்தப்பட்டாலும் ஆகம நெறிக்குட்பட்டு பூசை விழாக்கள் இடம்பெறும் ஆலயங்களில் சிலவற்றிலும் முதன்மை பெற்றுக் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்தில் பக்தர்கள் புறப்பட்டு அளம்பில் கடலுக்குச் சென்று அங்கு கடல் நீரை பானையில் வைத்து ஏழு நாட்கள் விளக்கு எரிக்கப்பட்டு தொடர்ந்து பூசைகள் இடம்பெறும் இதன்போது ஒவ்வொரு வேளையும் அரிப்பறை இசைக்கப்படுவது வழமை இங்கு கிராமிய ஆலயங்களில் மடைப்பண்டங்கள் எடுக்கும் சடங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு எடுத்துவரும்போது பூசாரி உருவேறி ஆடுவதும் சுவாமி காவும் பக்தர்கள் உருவேறி ஆடுதலையும் காணமுடிகின்றது. இதனூடாக நோக்குகின்றபோது பக்தர்களை மட்டுமன்றி பார்ப்பவர்களையும் முழுமையான பக்தி நிலைக்கு இட்டுச் செல்வது பறையிசைக்கு நிகர் வேறெதுவும் இல்லை எனலாம்.

வவுனியா கிடாச்சூரி கண்ணகை அம்மன் ஆலயத்தில் ஒவ்வொரு வருடமும் பறைமேள இசையுடன் தெய்வங்கள் ஊர்வலம் வருவதனை பார்ப்பதற்கு செல்லும் பக்தர்களும் பறைமேள இசையில் வசப்பட்டு நிற்பதைக் காணமுடியும். இவ்வாறு மக்கள் மனதை ஒருநிலைப் படுத்தி பக்தி மார்க்கத்திற்கு இட்டுச் செல்வதில் இவ்விசைக்கு பெரும் பங்குண்டு. இதனூடாக மக்கள் வாழ்வியலில் இவ்விசை பெரும்பங்கு வகிக்கின்றது என்பதனை காணமுடிகின்றது.

கொக்கொட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் திருவிழா நிறைவுற்ற பின்னர் கஞ்சி முட்டி கூறுதல் எனும் நிகழ்வுகள் குறிப்பிடத்தக்கது. இதில் ஒவ்வொரு சாதியினரும் தங்களது தலைமுறையினரைக் கூறி குலவிருதுகளைப் பெறுவர். இங்கு பறை மேளக் கலைஞர்களுக்கும் விருது வழங்கப்படுகின்றது. (நேர்காணல்) ஆகம வழிமுறைகளின் படி பூசை இடம்பெறும் கோயில்களில் பறையிசை குறைந்து கொண்டு சென்றாலும் மட்டக்களப்பில் பல ஆகம ஆலயங்களில் பூசை நேரத்தில் பறையிசை வாசிக்கப்படுகின்றமையினை இன்றைய நிலையில் காணமுடிகின்றது. அது மாத்திரமின்றி பன்றித்தலைச்சி, புளியம்பொக்கனை, புதூர், வற்றாப்பளை போன்ற பல கோயில்கள் ஆகம விதிப்படி இயங்கினாலும் பொங்கலின் போது பறைமேளம் இசைக்கப்படுவதனைக் காணமுடியும். செல்வச் சந்நிதியில் வெளிப்பிரகாரத்தில் பறையிசை

வாசிக்கப்படுவதுண்டு. மேற்கூறியது போல் மட்டக்களப்பு திமிலை தீவு விஸ்ணு ஆலயத் திருவிழாவிலும் பறையிசையின் பங்கு அளப்பரியது. இங்கு இடம்பெறும் பத்து நாட் திருவிழாவில் முதல் ஏழு நாள் திருவிழாவும் ஆகம முறைப்படி இடம்பெற்றாலும் இறுதி மூன்று நாள் திருவிழாவில் பறையிசையே முதன்மை பெறுகின்றமையை காணமுடிகின்றது. அத்தோடு இத்திருவிழா நாட்களில் கிருஸ்ணரது லீலைகளை சிறிய நாடக வடிவில் பூசைகளுடன் இணைத்து நடாத்தப்படுகின்றது. இதன்போது பறையிசையே பயன்படுத்தப்படுகின்றது. இத்திருவிழாவில் எட்டாம் நாள் திருவிழாவில் கம்சனது இறப்பு இடம்பெறுகின்றது. இச்சடங்கில் மரணக்கிரியைகள் அனைத்தும் நடைபெறும். இதன்போது பறையிசை வாசிக்கப்படுகின்றது.

கொக்கொட்டிச்சோலை ஆலயத்தில் ஆகம நெறிசார்ந்து பூசைகளும் விழாக்களும் இடம்பெறுகின்றபோதிலும் பூசை வேளைகளில் பறையிசை வாசிப்பதனை அவதானிக்கமுடிகின்றது. மட்டக்களப்பில் அதிகளவான ஆலயங்கள் இன்று கும்பாபிசேகம் செய்து சமஸ்கிருத மயமாக்கப்பட்டிருப்பினும் பூசை வேளைகளிலும் திருவிழாக் காலங்களிலும் பெரும்பான்மையாக பறையிசைக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. அதேபோன்று கல்லடித் தெரு புதுநகர் திரௌபதை அம்மன் ஆலயம், விடத்தல்முனை கண்ணகி அம்மன் கோயில், காரதீவு கண்ணகி அம்மன், கன்னங்குடா கண்ணகி அம்மன் போன்ற பல்வேறு ஆலயங்களில் பறையிசை இன்றைய நிலையிலும் முக்கியத்துவப்படுத்தப்பட்டிருக்கின்றது.

விசேட திருவிழாக்காலங்களில் மட்டுமன்றி சாதாரண பூசை வேளைகளிலும் பறையிசை இசைக்கப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. அதாவது கோயில்களில் தூணில் பறை கட்டப்பட்டு அதை பறையிசைக் கலைஞர்கள் அல்லாதவர்களும் இசைக்கின்ற பாரம்பரியம் மட்டக்களப்பில் உண்டு. மேலும் இந்துக்களது மார்களித் திருவாதிரை திருப்பாவை நிகழ்வுகள் பெரும்பாலன ஆலயங்களில் சிறப்பாக இடம்பெறுகின்றன. இக்காலத்தில் ஆலயங்களில் இருந்து ஊர்களில் அதிகாலை வீதிவீதியாகச் சென்று பக்தர்களை துயில் எழுப்பும் நிகழ்வு இடம்பெறுவது வழமையாகும். இந்நிகழ்வில் பறையிசையானது தெருக்களிலும் ஒவ்வொரு சந்திகளிலும் வைத்து இசைக்கப்படுகின்றது. இப்பறையிசையினை இசைப்பவர்கள் பறைமேளக் கலைஞர்கள் அல்லாத சாதாரண பக்தர்களாகவே காணப்படுகின்றனர். இதனூடாக நோக்குகின்றபோது பறையிசையானது ஆலயங்கள் வாயிலாக மக்கள் வாழ்வியலில் தாக்கம் செலுத்துவதனை அறிய முடிகின்றது. இவையாவற்றிற்கும் மேலாக எமது வரலாற்றுப் பாரம்பரிய பறையிசையினை வளர்க்கும் முகமாக இந்து சமய கலாச்சார அமைச்சுக்கள் திணைக்களத்தினால் ஆலயங்களுக்கு வழங்கப்பட்ட இலத்திரணியல் பறையும் குறிப்பிடத்தக்கது. தினப் பூசைகளின்போது பறையிசைப்பதற்கு இலத்திரணியல் பறைகள் வழங்கப்பட்டன. இவற்றை இன்று மாமாங்கப்பிள்ளையார், களுதாவளைப் பிள்ளையார், மாரியம்மன், முருகன் போன்ற ஆலயங்களில் காணமுடிகின்றது.

## நிறைவுரை

இவ்வாறாக மேற்கூறிய விடயங்களை தொகுத்து நோக்குகின்றபோது பறையின் செயற்பாடு எமது பாரம்பரிய இசை வடிவங்களில் முதன்மையானதாகவும் வரலாற்றுத் தொன்மைமிக்கதாகவும் காணப்படுகின்றமையை அறியமுடிகின்றது. அதுமட்டுமன்றி பறைமேளக் கலைஞர்களுக்கு சமூகம் கொடுக்கின்ற அங்கீகாரமானது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இதனால், இப்பாரம்பரிய கலைவடிவமானது பின்னோக்கிச் செல்கின்றதனை அவதானிக்க முடிகின்றது. மக்களது இன்ப துன்பங்களில் பங்குகொண்டு அவர்களது வாழ்வியலில் இருந்து பிரித்து பார்க்க இயலாதவாறு பறையிசை பிணைந்து இருப்பதனையும் தற்காலத்தில் மக்கள் மத்தியிலும் செல்வாக்கு இழந்து இறப்பியல் சடங்கில், சில ஆலயங்களில் மாத்திரமே பயன்படுத்தப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு இருந்தாலும் பறைமேளக் கலைஞர்கள் மாத்திரமின்றி பறைமேளக் கலைஞர்கள் அல்லாதோரும் இக்கலையினை முன்னெடுக்கின்றமையினை காணமுடிகின்றது. அதேபோன்று இதனை பேணிப்பாதுகாப்பதற்கான முயற்சிகளும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

பறைமேளக் கலைஞர்கள் தங்களை அச்சமூகத்திற்கு உரியவர்கள் என்று காட்டிக் கொள்ளாத நிலை தற்காலத்தில் இடம்பெறுவதனைக் காணமுடிகின்றது. அவ்வாறு வெளிக்காட்டினால் தங்களுக்கும் தங்கள் சந்ததியினருக்கும் சமூகத்தில் உரிய இடம் கிடைக்காது என்ற மனப்பாங்கு உடையவர்களாகவும் காணப்படுகின்றனர். இதற்கான காரணம் சமூகத்தில் இதற்குக் கொடுக்கப்படுகின்ற அங்கீகாரம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. அது மாத்திரமின்றி இதனை தொழிலாகச் செய்பவர்களுக்கு போதிய வருமானம் இல்லாமையினால் அவர்கள் ஏனைய தொழிலை தேடிச் செல்பவர்களாகவும் உள்ளனர். பறைமேளக்கலையானது ஒரு சமூகத்திற்கு மட்டும் உரியதன்று, ஒட்டுமொத்த தமிழ் சமூகத்திற்குமுரிய கலை என்பதனை இன்று சமூகத்திற்கு ஊட்டவேண்டி நிற்பந்தம் காணப்படுகின்றது என்பதனை அறியமுடிகின்றது. பறைமேளக் கலைஞர்கள் மாத்திரமின்றி ஏனைய சமூகத்தினரும் ஆர்வத்துடன் கற்பதற்கு முன்வரவேண்டும். அதுமாத்திரமின்றி இதற்கான பயிற்களையும் வழங்கவதற்குரிய வழிமுறைகளை உருவாக்கவேண்டும்.

## உசாத்துணை நூல்கள்

[1] பேராசிரியர்,மௌனகுரு.சி,(1998)“மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்”,மட்டக்களப்பு

[2] வளர்மதி.மு(2009),“பறையிசைக்கருவி ஓர் ஆய்வு”, சென்னை

[3] அம்ருதா பதிப்பகம்.

[4] தேநேயப்பாவாணர்,(1943), “இசைத்தமிழ்க் கிளர்ச்சி”, நளிசெந்தமிழ்ச் செல்வி

[5] தேனகம் சஞ்சிகை(2003),மட்டக்களப்பு பிரதேச செயலகம்

[6] https//www.keetru.com,index,php

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

[7] மட்டக்களப்பு இணையம்(31.5.20021), “ஈழத்தில் பறையிசை”,mattakalappu.com

[8] “பறைமேளக்கூத்தும் இன்றைய நிலையும்”,arayampathi.lk

[9] “மட்டக்களப்பு பூர்வீகக் கலைகள் அந்நிய மோகத்தில் ஆடிப்போகும் ஆபத்து”, battinews.com

[10] “மட்டக்களப்பின் புகழ்பெற்ற பறைமேளக்கலைஞர்களின் கூத்து ஆற்றுகை”, samakalam.com

[11] “பறைமேளக்கூத்து”,ta.m.wikkipedia.org